2018 ஜனவரி 10] **[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]**

முற்பகல் 11–40

அதைப்போலவே, நேற்று மாலை 6–30 மணியளவில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. வேலுமணி அவர்கள் கோயம்புத்தூர் வனக் கோட்டம், காரமடை வனச் சரகம், மானார் பிரிவு, மானார் சுற்று, மானார் மலைவாழ் மக்கள் குடியிருப்புக் கிராமத்தைச் சேர்ந்த செல்வம் என்பவர் மாலை 6–15 மணியளவில் பில்லூர் சாலையில் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது, முள்ளிவனச் சோதனைச் சாவடிக்கு 1 கிலோ மீட்டருக்கு முன்னதாக காட்டு யானையால் தாக்கப்பட்ட செய்தியைச் சொன்னார்கள். அதையும் சம்பந்தப்பட்ட வன அதிகாரிகளிடம் கேட்டு உறுதி செய்திருக்கிறார்கள். முதலில் சொன்னதைப்போலவே, உடனடியாக காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, இறந்தவரின் உடலை பிரேத பரிசோதனை செய்து, அரசு ஆணைகளின்படி, இறந்தவரின் குடும்பத்தாருக்கு உடனடி நிவாரணத் தொகை ரூ.50,000/– வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, நான் குறிப்பிட்டதுபோல பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து சான்றிதழ்கள் பெறப்பட்டவுடன், நிவாரணத் தொகையில் மீதமுள்ள ரூபாய் 3 இலட்சத்து 50 ஆயிரத்தை அவர்களுடைய குடும்பத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, அங்கே யானைகள் மூலமாக மறுபடியும் பிரச்சினைகள் ஏற்படாத அளவிற்கு நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து வன அதிகாரிகளுக்கும் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. நேற்று முதல் யானைகள் மூலமாக மக்களுக்கு ஆபத்து வராத சூழ்நிலை அங்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. மேலும், இன்றும் அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்ற செய்தியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

(இ) 'குட்கா' விவகாரம்–அதிகாரி மாற்றப்பட்டது குறித்து விசாரணை நடத்துதல்

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையிலே பேசப்பட்ட ஒரு பிரச்சினை. எனவே, அதுகுறித்து நான் ஒரு விளக்கத்தை இந்த*

அரசின் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 'குட்கா' விவகாரம். அந்த விவகாரத்தை ஒரு நேர்மையான vigilance *அதிகாரியைக் கொண்டு விசாரணை நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இந்த விஷயம் நீதிமன்றத்தில் இருக்கிறது. (குறுக்கீடு) நீதிமன்றத்தில் இருக்கின்ற விஷயத்தைப்பற்றி நீங்கள் திரும்பத் திரும்பக் கேட்பதால், உங்களுக்கு எந்தப் பதிலும் அரசு. . . (குறுக்கீடு) அந்தப் பிரச்சினை சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அதைப்பற்றி எதுவும் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) அரசு நடவடிக்கை எடுப்பதற்கும், நீதிமன்றத்தில் இருப்பதற்கும் நீங்கள் முடிச்சு போட வேண்டாம். (குறுக்கீடுகள்) அந்தப் பிரச்சினை நீதிமன்றத்தில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, அது அரசாங்கத்தினுடைய நிருவாகப் பணி. (குறுக்கீடுகள்) அதையும், 'குட்கா' விவகாரத்தையும் நீங்கள் சம்பந்தப்படுத்த வேண்டாம். (குறுக்கீடுகள்) அது நீதிமன்றத்தில் இருக்கிறது. நீதிமன்றத்தினுடைய உத்தரவு பெற்றதற்கு பின்பு, அதுகுறித்து நாம் இந்த அவையில் தேவைப்பட்டால் அப்போது பேசலாம். இப்போது அதைப்பற்றி நாம் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

நீதிமன்றத்தில் இருப்பதால் அதைப்பற்றி நான் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) அது நிருவாகம் குறித்தது. (குறுக்கீடுகள்) 'குட்கா' சம்பந்தமாக நீங்கள் சொன்னது, நீதிமன்றத்தில் இருப்பதால் அதை நான் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) அது வேண்டாம், விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) அதை விட்டுவிடுங்கள். வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. மு.க. ஸ்டாலின்: *நீதிமன்றத்தைப்பற்றி நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. நீதிமன்றத்தை விமர்சனம் செய்தோ, அதனுடைய கருத்துகளை எடுத்துப் பேசவோ நான் விரும்பவில்லை. ஆனால், ஓர் அதிகாரி மாற்றப்பட்டிருக்கிறார். என்ன காரணத்திற்காக அவர் மாற்றப்பட்டிருக்கிறார் என்பதை அரசு விளக்கிட வேண்டும்.*

2018 ஜனவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அதெல்லாம் நிருவாகத்தில் அவர்கள் செய்திருப்பார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் 'குட்கா' விவகாரத்தையும், இதையும் சம்பந்தப்படுத்திக் கேட்க வேண்டாம். (குறுக்கீடுகள்) பொதுவாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'குட்கா' சம்பந்தமாக பேசுவதனால், அதுசம்பந்தமான பிரச்சினை நீதிமன்றத்தில் இருக்கிறது. அதனால் அதைப்பற்றி நாம் இங்கு பேச வேண்டாம். மற்ற நிருவாக விஷயங்கள் அனைத்தையும் பேச நான்* zero hour*–ல் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) அதிகாரிகளை மாற்றுவது குறித்து வேண்டாம். அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாம். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நான்* zero hour*–ல் பேச அனுமதிக்க முடியாது.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

அதற்கு நான் அனுமதி தரமாட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, அந்தக் கமிஷனரை நீதிமன்றம் ஒன்றும் நியமிக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, அவரை நீதிமன்றம் நியமிக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது தவறு. (குறுக்கீடுகள்) அதுசம்பந்தமான பிரச்சினை நீதிமன்றத்தில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதிகாரிகளைப் போடுவதும், மாற்றுவதும் அரசாங்கத்தினுடைய முடிவு. அதைப்பற்றி zero hour*–ல் கேட்டால் எப்படி? தினம் அதிகாரிகளை மாற்றுவதும், போடுவதுமாக இருக்கிறது. அதைப்பற்றிப் பேச நான்* zero hour*–ல் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) 'குட்கா' விவகாரம் குறித்த பிரச்சினை நீதிமன்றத்தில் இருக்கிறது. அதனால் நான் அதைப்பற்றிப் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) விட்டுவிடுங்கள். அதைப்பற்றி பேச நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் சொல்வதற்கு நான் ஒன்றும் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தில் இருப்பதால், அதைப்பற்றிப் பேச நான் அனுமதிக்கவில்லை. அவ்வளவுதான். சரி.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)